# “தர்மம் சர,,

மார்ச் (15 .3.2026) • கும்பகோணம் • பிரதி-19


## ப்ரஹ்மஸ்ரீ குருராம கனபாடிகள் பேசுகிறார்

## உபநயனம்



**ப்ராஹ்மணனின் வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்காக வகுக்கப்பட்ட முக்கிய சம்ஸ்காரங்களில் மிகவும் இன்றியமையாதது 'உபநயனம்' ஆகும். இது ஒரு வடு (சிறுவன் ) தனது சிறுவயதைக் கடந்து, கல்வியையும் ஒழுக்கத்தையும் கற்கத் தொடங்கும் 'பிரம்மச்சரிய' ஆசிரமத்திற்குள் நுழைவது உன்னதமான சம்ஸ்காரம் ஆகும் .**

**உபநயனம் - பெயர்க்காரணம்**

'உப' என்றால் 'அருகில்' என்றும், 'நயனம்' என்றால் 'அழைத்துச் செல்வது' என்றும் பொருள். அதாவது, அறியாமை இருளை அகற்றி, மெய்ஞானத்தை அறிவதற்காக ஒரு சிறுவனை குருவின் அருகில் அழைத்துச் செல்வதே உபநயனத்தின் உண்மையான பொருளாகும்.பாரதப் பண்பாட்டில் ஒரு மனிதன் தன் வாழ்நாளில் கடந்து செல்ல வேண்டிய மிக முக்கியமான ஸம்ஸ்காரங்களில் உபநயனம் முதன்மையானது. இது ஒருவனுக்கு 'இரண்டாம் பிறப்பு' (துவிஜன்) போன்றது. ஒழுக்கமான, தர்ம வழியிலான வாழ்க்கைக்கு இதுவே அடித்தளம்.

**சனாதனத்தின் அடையாளங்களும் அதன் தத்துவங்களும்:**

உபநயனத்தின் போது ஒரு பாலகனுக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு பொருளும் ஒரு ஆழமான வாழ்வியல் தத்துவத்தைக் கொண்டுள்ளது: யஜ்ஞோபவீதம் (பூணூல்): இது மிகவும் புனிதமானது. பிரஜாபதியுடன் தோன்றியதாகக் கருதப்படும் இது, அணிபவருக்கு நீண்ட ஆயுளையும், உடல் வலிமையையும், அறிவுத் தேஜஸையும் வழங்குகிறது.

**மௌஞ்சி பந்தனம்:** முஞ்சா புல்லால் ஆன கயிற்றை இடுப்பில் கட்டுவது 'இந்திரிய நிக்ரஹத்தை' அதாவது புலன் அடக்கத்தைக் குறிக்கிறது. இது ஒழுக்கமான வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறது.

**கிருஷ்ணாஜின தாரணம் & தண்டம்**: மான் தோல் மற்றும் தண்டினைக் (கோல்) கையில் ஏந்துவது, அந்தப் பாலகன் இனி தவம், எளிமை மற்றும் குருவின் வழிகாட்டுதலில் கட்டுப்பாட்டுடன் வாழப் போகிறான் என்பதைக் காட்டுகிறது.

**பிரம்மோபதேசம்:** தந்தையே சிறுவனுக்கு முதல் குருவாக இருந்து, அவனது வலது காதில் மிகவும் சக்தி வாய்ந்த 'காயத்ரி மந்திரத்தை' உபதேசிப்பார். மந்திரம் ॐ भूर्भुवः स्वः तत्सवितुर्वरेण्यं भर्गो देवस्य धीमहि धियो यो नः प्रचोदयात्॥= அர்த்தம்: சூரிய நாராயணனின் தெய்வீக ஒளியை தியானித்து அவர் நம் புத்தியை நல்ல வழியில் நடத்த வேண்டும் என்று வேண்டுகிறோம்.

**பிக்ஷை எடுத்தல்:** கல்வியைத் தொடங்கும் மாணவன் (பிரம்மச்சாரி) தன்னிடம் உள்ள அகங்காரத்தை (ஈகோ) விட்டொழிக்க வேண்டும் என்பதற்காக, தன் தாய் மற்றும் உறவினர்களிடம் "பவதி பிக்ஷாம் தேஹி" என்று கூறி உணவு கேட்கும் சடங்கு நடைபெறும். இது பணிவையும், எளிமையையும் கற்றுக்கொடுக்கிறது.

**சந்த்யாவந்தனம்**

காலை, நண்பகல், மாலை என மூன்று வேளைகளிலும் 'சந்தியாவந்தனம்' செய்து காயத்ரி மந்திரத்தை ஜபிக்க வேண்டும் என்பது நியமம்.सन्ध्याहीनः अशुचिः नित्यं अनर्हः सर्वकर्मसु। சந்த்யாவந்தனம் செய்யாதவன் எந்த கர்மத்திற்கும் தகுதியில்லை.உபநயனத்தின் முக்கிய நோக்கம் 1. காயத்ரி ஜபம் 2. சந்த்யாவந்தனம் 3. குருகுல வாழ்க்கை 4. வேதம் கற்றல் 5. தர்ம வாழ்க்கை

**தொடரும் .**

# ஸ்ரீமதி ஸௌம்யா குருராமன்



**நாம் அறியாத அதிர்வுகள்**

ஒரு பிராமண இல்லத்தின் அஸ்திவாரம் அந்த வீட்டின் 'ஸ்ரீ' எனப்படும் இல்லத்தரசிதான். நாம் தினமும் கடைபிடிக்கும் சில எளிய விஷயங்களுக்குப் பின்னால் மிக உயரிய தர்மமும், அறிவியலும் ஒளிந்துள்ளன. இந்த வாரம், நாம் அன்றாடம் பயன்படுத்தும் மங்கலப் பொருட்களில் நமக்குத் தெரியாத சில சூட்சுமங்களைப் பற்றிப் பார்ப்போம்.

**1. மஞ்சளின் 'ஆக்ஞா' சக்கரம்**

நாம் சுமங்கலிகளாக முகத்திற்கு மஞ்சள் பூசிக்கொள்வது வெறும் அழகுக்காக மட்டுமல்ல. புருவங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் 'ஆக்ஞா சக்கரம்' உள்ளது. மஞ்சள் ஒரு சிறந்த 'ஆன்டி-செப்டிக்' என்பது நமக்குத் தெரியும், ஆனால் அது எதிர்மறை எண்ணங்களை (Negative Vibrations) தடுக்கும் ஒரு கவசமாகவும் செயல்படுகிறது. மற்றவர் நம்மைப் பார்க்கும் போது ஏற்படும் 'திருஷ்டி' அல்லது தீய பார்வையின் வீச்சை, முகத்தில் இருக்கும் மஞ்சள் சிதறடித்து (Reflect), நம் மன அமைதியைக் காக்கிறது.

**2. மெட்டி அணிவதன் 'பிராண' ரகசியம்**

காலில் மெட்டி அணிவது திருமணமானதற்கான அடையாளம் என்பது பொதுவான கருத்து. ஆனால், நமது சாஸ்திரங்களின்படி, கால் பெருவிரலுக்கு அடுத்த விரலில் இருக்கும் ஒரு நரம்பு நேராக இதயத்திற்கும் செல்கிறது. மறைந்திருக்கும் உண்மை: வெள்ளி உலோகத்தாலான மெட்டி, பூமியிலிருந்து வரும் 'காந்த ஆற்றலை' (Magnetic Energy) ஈர்த்து உடலுக்குத் தருகிறது. இது பிராமணப் பெண்களின் ஹார்மோன் சமநிலையைப் பேணுவதோடு, மன அழுத்தத்தைக் குறைக்கும் ஒரு 'அக்குபிரஷர்' முறையாகவும் செயல்படுகிறது.

**3. கோலமும் 'பூத யக்ஞமும்'**

வாசலில் கோலமிடுவது ஒரு கலை மட்டுமல்ல, அது ஐம்பெரும் வேள்விகளில் ஒன்றான 'பூத யக்ஞம்'. நாம் பச்சரிசி மாவினால் கோலமிடும்போது, அது எறும்புகளுக்கும் சிறு பூச்சிகளுக்கும் உணவாகிறது. இது ஒரு தர்மம்.ஆனால், இதில் ஒரு ரகசியம் உண்டு: கோலத்தின் புள்ளிகளை இணைக்கும் போது ஏற்படும் வடிவியல் (Geometry) அமைப்புகள், அந்த வீட்டின் வாசலில் ஒரு 'பாதுகாப்பு வளையத்தை' (Energy Grid) உருவாக்குகின்றன. அதனால்தான், கோலமிட்ட வாசலில் துர்சக்திகள் நுழைய அஞ்சும் என்பார்கள் பெரியோர்கள்.

**4. குங்குமத்தின் புனிதம்**

இன்று பலரும் 'ஸ்டிக்கர்' பொட்டுகளைப் பயன்படுத்துகிறோம். ஆனால், இயற்கை மஞ்சள் மற்றும் சுண்ணாம்பு கலந்து செய்யப்பட்ட பாரம்பரிய குங்குமத்திற்கு மட்டுமே 'மின் காந்த சக்தியை' (Electromagnetic energy) ஈர்க்கும் திறன் உண்டு. ஸ்டிக்கர் பொட்டுகள் இந்த சக்தியைத் தடுப்பதோடு, அந்த இடத்தில் ஒரு பிளாஸ்டிக் திரையை உருவாக்கி விடுகின்றன.தர்மம் என்பது வெறும் சடங்கல்ல; அது ஒரு வாழ்வியல் அறிவியல். ஒரு பிராமண ஸ்ரீயாக நாம் இந்தச் சிறு மாற்றங்களைச் செய்யும் போது, நம் இல்லம் ஒரு தேவாலயமாக மாறுகிறது. 'தர்மம் சர' - தர்மத்தின் வழி நடப்போம், நம் சந்ததிக்கு வழிகாட்டுவோம்.

**தொடரும்**



## “அடிப்படை தர்மங்கள்”

**வித்வான் விரூபாக்ஷ சர்மா**

### அக்னி மற்றும் தீப மரியாதை

**ஊதுதல்:**
எரியும் தீபத்தையோ அல்லது ஹோம அக்னியையோ ஒருபோதும் வாயால் ஊதி அணைக்கக் கூடாது. நம் வாயிலிருந்து வரும் காற்று அசுத்தமாகக் கருதப்படுகிறது.

**தாண்டுதல்:** எரியும் தீபத்தையோ, அக்னியையோ அல்லது அதன் நிழலையோ தாண்டிச் செல்லக் கூடாது.

**பரிமாறுதல்:** உணவில் நெய் பரிமாறும்போது, கரண்டி பாத்திரத்தில் மோதி சத்தம் வரக்கூடாது. அது அக்னி பகவானுக்குச் செய்யும் அவமரியாதையாகக் கருதப்படுகிறது.



**ஸ்ரீ சர்மா சாஸ்திரிகள்**

**சூரிய உதயம்:**
சூரியன் உதயமான பிறகும் தூங்கிக் கொண்டிருப்பவனுக்கு அந்த நாளின் புண்ணியம் குறைவதாகக் கருதப்படுகிறது. இதற்குப் பிராயச்சித்தமாக அந்த நாள் முழுவதும் காயத்ரி ஜபம் செய்ய வேண்டும்.

**சந்திப்பு:** இருவர் பேசிக்கொண்டிருக்கும்போது அவர்களுக்கு நடுவில் புகுந்து செல்லக்கூடாது. குறிப்பாக பிராமணன்-அக்னி, கணவன்-மனைவி, குரு-சீடன் இவர்களுக்கு இடையே குறுக்கே செல்லக்கூடாது.

வேங்கடேஷ்- பூர்வமீமாம்ஸா சிரோமணி

## அத்வைத கதைகள்

**இரண்டாவது சூத்ரம்** **ॐ जन्माद्यस्य यत:** **ஜன்மாத்யஸ்ய யத:**

ஒரு ஊரில் ஒரு முதிய குயவர் இருந்தார். அவர் பலவிதமான அழகான பொம்மைகளைச் செய்வதில் வல்லவர். ஒருநாள் ஒரு சிறுவன் அவரிடம் வந்து, அங்கிருந்த ஒரு யானை பொம்மையையும், ஒரு குதிரை பொம்மையையும் காட்டி, "தாத்தா, இவை இரண்டும் சண்டையிட்டுக் கொள்ளுமா? இவை வேறு வேறானவையா?" என்று கேட்டான்.
பெரியவர் சிரித்துக்கொண்டே சொன்னார், "குழந்தாய், நீ பார்ப்பதற்கு அவை வெவ்வேறாகத் தெரியலாம்.
யானை தும்பிக்கையோடு இருக்கிறது, குதிரை நான்கு கால்களோடு ஓடுவது போல் இருக்கிறது. ஆனால், உன் கண்ணை மூடிவிட்டு அவற்றைத் தொட்டுப் பார்." சிறுவன் தொட்டுப் பார்த்தான். "இரண்டுமே களிமண்ணாகத்தான் தெரிகிறது தாத்தா," என்றான். பெரியவர் விளக்கினார்: "அதுதான் உண்மை. இந்த உருவங்கள் (நாம-ரூபங்கள்) வெறும் தோற்றம் மட்டுமே. இந்த பொம்மைகள் உருவாவதற்கு முன்னால் வெறும் களிமண்ணாக இருந்தன. இவை உடைந்தாலும் மீண்டும் களிமண்ணாகவே மாறும்.
அதேபோல்தான் இந்த உலகமும். மனிதர்கள், விலங்குகள், செடி, கொடி என அனைத்தும் வெவ்வேறு உருவங்களாகத் தெரிந்தாலும், அவை அனைத்திற்கும் மூலப்பொருள் அந்த ஒரே பிரம்மம் தான். 'யாரிடமிருந்து அனைத்தும் தோன்றியதோ' அவரே அந்த ஆதிமூலம். கடலில் எழும் அலைகள் வேறல்ல, கடல் வேறல்ல. அலைகளும் தண்ணீர்தான், கடலும் தண்ணீர்தான். நாமும் அந்தப் பரம்பொருளின் அங்கங்களே என்பதை உணர்வதே அத்வைதம்."
சிறுவன் இப்போது பொம்மைகளைப் பார்க்கவில்லை, அதன் பின்னால் இருந்த உண்மையான 'களிமண்ணை' உணர்ந்தான்.

## வேதப்பயிர் செய்து வேதவாழ்வினைக் கடைப்பிடித்தோம் வேதங்கள் பாடுவாள் காணீர்.

நமது சந்ததியினர் வேதங்களைக் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித்தருவோம்







**நமது பாடசாலையில் புதுபெரியவா ஆராதனை சிறப்பாக நடைபெற்றது**





## ஸம்சய நிவ்ருத்தி

தர்ம ஷாஸ்த்ர மற்றும் ஆன்மீக தொடர்பான கேள்விகள் வரவேற்கபடுகின்றன .8838515265-என்ற வாட்சப் எண்ணிற்கு உங்கள் பெயர் ஊர் பெயருடன் அனுப்பவும்.